திரு. தி. இராமசாமி: இந்த நிதிநிலை சம்பந்தமாக, இந்தக் கடன் சம்பந்தமாக ஒரு வெள்ளை அறிக்கை, தெளிவான ஓர் அறிக்கையை தாக்கல் செய்வதன்மூலம் கடன் எவ்வளவு இருக்கிறது, பற்றாக்குறையில் இயங்குகிறதா அல்லது வாங்கிய கடனுக்கு வட்டி எவ்வளவு கட்டுகிறோம் என்ற விவரத்தை அனைத்து உறுப்பினர்களும் சரி, தமிழக மக்களும் சரி, தெரிந்துகொள்ள முடியும்.

பிற்பகல் 1-40

அதேபோல குடிசையில்லாத் தமிழகம் வரவேற்கிறோம். மிகவும் பாராட்ட வேண்டிய திட்டம். ஆனால் குடியிருக்கக் குடிசைப் போட இடமே இல்லாத தமிழர்கள் 25 இலட்சம் பேர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பட்டா கொடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். கடந்த காலங்களில் அரசின் சார்பில் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வீடில்லாதவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. இந்த நான்கு ஆண்டு காலத்தில் ஆதி திராவிட நலத் துறையின் மூலமாகவோ, மற்ற துறைகளின் மூலமாகவோ நலிந்த பகுதி மக்களுக்கு, வறுமையில் வாடுபவர்களுக்கு அரசின் சார்பில் கையகப்படுத்தப்பட்டு ஒரு சென்ட் நிலம்கூட வழங்கப்படவில்லை. குறிப்பாக எனது தொகுதியில் நான்கு ஆண்டு காலத்தில் எதுவுமே வழங்கப்படவில்லை. ஆக, 65 இலட்சம் மக்கள் இன்றைக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6-4-2010) செவ்வாய்க் கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

12. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

2010 ஏப்ரல் 5]

13. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சாலை கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

14. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தாறாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1 1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

15. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

16. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் இருபத்தைந்தாவது ஆண்டறிக்கை. [*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

17. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கை. [*1974* ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் *6/1974*) *39 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

18. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டம்) *323 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

7. 2009-2010 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

8. 2009-2010 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)